# கொங்கு நண்பர்கள் இதழ்

பதிவு எண். : 248/2012

திருவள்ளுவர் ஆண்டு 2042 (ஆவணி–புரட்டாசி) செப்டம்பர் 2012 ஏர்-01, உழவு-03, விலை ரூ.10.00

பதிப்பாளர் :
கே.பாலசுப்பிரமணி
கொங்கு நண்பர்கள் இதழ்
ஆசிரியர் & பதிப்பாளர்
H-71, 5வது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை – 600 102.
செல் : 9381545452

அச்சகம் :
மரியம் இப்ராஹிம்
பிராம்ட் ஆப்செட் பிரிண்டர்ஸ்
நெ.49/37, வெள்ளாளர் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை – 600 024.

## இந்த இதழில்

| | | |
|---|---|---|
| பொருளடக்கம் | - | 1 |
| தலையங்கம் | - | 2 |
| கட்டட நிதி | - | 3 |
| வேண்டுகோள் | – | 4 |
| அடையாள அட்டை விண்ணப்பம் | – | 5 |
| பொன்விழா 2012 | – | 6 |
| என்றும் நலமுடன் வாழ | - | 11 |
| மணமகள் தேவை | - | 14 |
| குடும்ப விழா 2012 | - | 15 |
| கொங்கு மாமணிகள் | - | 19 |
| கொங்குமாமணி 2012 | - | 21 |
| மணமகன் தேவை | - | 24 |
| மணமகள் தேவை | - | 26 |
| மணமகன் தேவை | - | 28 |
| மணமகள் தேவை | - | 30 |

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / கொங்கு நண்பர்கள் இதழ் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

அன்பு சொந்தங்களுக்கு,



வணக்கம். சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வரலாற்றில் **2–09–2012** அன்று ஒரு பொன்னாள். சென்னை காமராஜர் அரங்கத்தில் சங்கத்தின் பொன்விழா சீரோடும், சிறப்போடும் நடைபெற்றது. அரங்கு நிறையவில்லையே என்று முன்னர் சில ஆண்டுகள் ஆதங்கப்பட்டதுண்டு. ஆனால் விழாவிற்கு வந்த அனைவரையும் உட்காரவைக்கவும், காத்திருக்காமல் மதிய உணவு அளிக்கவும் முடியவில்லையே என்று வருத்தப்படும்அளவுக்கு அரங்கு நிரம்பி வழிந்ததோடு, பலர் நின்றுகொண்டும், அரங்கத்திற்கு வெளியிலும் இருந்தனர். கொங்கு மண்டலமே சென்னையில் திரண்டதுபோல் இருந்தது.

இந்த அளவுக்கு சுமார் **3500** பேர் கலந்துகொண்டு பொன் விழாவைச் சிறப்பித்தது சங்க வரலாற்றில் ஒரு சாதனையென்றால் அது மிகையல்ல. பொன்விழாவில் கலந்து கொண்டு சிறப்பு சேர்த்த அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சங்கத்தின் அழைப்பையேற்று விழாவில் கலந்து கொண்டு, கொங்குமாமணி விருது பெற்று சங்கத்திற்குப் பெருமை சேர்த்த திரையுலக மார்கண்டேயர் திரு.சிவகுமார் அவர்களுக்கு சங்கத்தின் சார்பிலும், என் சார்பிலும் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விழாவிற்குத் தலைமை வகித்து, விருது வழங்கி சிறப்புரையாற்றிய தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார் அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

சங்கத்தின் அழைப்பையேற்று மலேசியா நாட்டிலிருந்து வருகை தந்து 'வெளிநாடு கொங்கு சாதனையாளர்' விருது பெற்றதோடு அருமையானதோர் ஏற்புரை நிகழ்த்திய மலேசிய நாமக்கல் நல அபிவிருத்தி மன்றத் தலைவர் திரு. ஆர்.கருணாகரன் அவர்களுக்கும், 'கொங்கு சாதனையாளர்' விருது, 'கொங்கு வேளாண் சாதனையாளர்' விருது மற்றும் 'கொங்கு இளம் சாதனையாளர்' விருது பெற்று பாராட்டு பெற்ற சாதனையாளர்களுக்கும், பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்புகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்று பரிசும், பதக்கமும், சான்றிதழும் பெற்ற கொங்குச் சமுதாய மாணவர்களுக்கும் சங்கத்தின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறேன்.

சங்கத்தின் அழைப்பையேற்று விழாவிற்கு வருகை தந்து, நினைவுப்பரிசு பெற்ற முன்னாள் தலைவர்கள், முன்னாள் செயலாளர்கள் ஆகியோருக்கு மனம் நிறைந்த நன்றிகள் பலப்பல. விழா நிகழ்ச்சிகளை அருமையாகத் தொகுத்தளித்த திருமதி நிர்மலா பெரியசாமி அவர்களுக்கும், விழா நிகழ்ச்சிகள் சிறப்பாக அமைந்திட பாடுபட்ட செயற்குழு உறுப்பினர்களுக்கும், விழாவில் கலந்துகொண்ட சங்க உறுப்பினர்களுக்கு அழகிய, பயன்மிக்க பைகள் வழங்கிய All Times நிறுவனத்திற்கும், சங்க நிர்வாகிகள் அனைவருக்கும் வேட்டிகள், சட்டைகள் கொடுத்த 'ராம்ராஜ் காட்டன்' நிறுவனத்திற்கும், விழாக் குழுவினரின் வேண்டுகோளுக்கிணங்க வேட்டி சட்டை அணிந்து கொங்கு மணம் கமழவைத்த அனைத்து கவுண்டர்களுக்கும், விழா இவ்வளவு சிறப்பாக நடைபெற ஆதரவு அளித்த அனைத்து உறுப்பினர்களுக்கும் சங்கத்தின் சார்பில் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

பொன்விழா சிறப்பு மலர் மூலம் நிதி கொடுத்து விளம்பரம் செய்த அன்பு சொந்தங்களுக்கும் மலர் குழு தலைவர் திரு.பி.சென்னியப்பன், துணைத்தலைவர் திரு. கே.கே.ரமேஷ் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பொன்விழாவைச் சிறக்க வைத்த, இரவு பகல் பாராமல் ஒருமாதகாலம் ஓயாமல் உழைத்த சங்க நிர்வாகிகள், விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த உறுப்பினர்கள், குடும்பத்தார், சொந்தங்கள் அனைவருக்கும் மீண்டும் நன்றி.

நன்றி! வணக்கம்!

பரணி கே. பாலசுப்பிரமணி
தலைவர்

❖❖❖❖❖

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 72,23,936 |
| 1677 | 195 | V.சுப்பராயன் | 1000 |
| 1678 | | A.சாந்தி | 1000 |
| 1679 | 274 | S.M.பொன்னைய்யா | 1000 |
| 1680 | | K.R.கௌதம் | 1000 |
| 1681 | | N.முத்துசாமி | 1000 |
| 1682 | 3028 | M.செல்வராஜ் | 1000 |
| 1683 | 3020 | D.கண்ணகவுண்டர் | 1000 |
| 1684 | | D.ரவிச்சந்திரன் | 1000 |
| 1685 | 2688 | K.P.பரமசிவம் | 1000 |
| 1686 | | M.தேன்மொழி | 1000 |
| 1687 | 1969 | C.கணேஷ் | 5001 |
| 1688 | 2034 | M.சுதாகர் | 1000 |
| 1689 | 2809 | M.சுப்ரமணியன் | 1000 |
| 1690 | 1590 | C.பழனிசாமி | 1000 |
| 1691 | | நவீன் ராகவ் | 1000 |
| 1692 | 205 | M.V.சுப்ரமணியம் | 1000 |
| 1693 | 1376 | P.ரவிச்சந்திரன் | 1000 |
| 1694 | | S.R.கணபதி | 1000 |
| 1695 | | T.சிவா | 1000 |
| 1696 | 1094 | K.மாரப்பன் | 1000 |
| 1697 | | P.R.சுவாதிகா | 1000 |
| 1698 | | செந்தில்குமார் | 1000 |
| 1699 | | கே.பொன்னுசாமி | 1100 |
| 1700 | | எஸ்.திரிஷாராணி | 1000 |
| 1701 | | கே.கமலாதேவி | 1000 |
| | | மொத்தம் | **72,53,037** |

## உறுப்பினர்களுக்கு அன்பான வேண்டுகோள்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் புதியதாக அடையாள அட்டை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று ஏற்கனவே செய்தி மடல் வாயிலாக பலமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. செய்தி மடலில் வெளியிடப்பட்டுள்ள அடையாள அட்டை மாதிரி விண்ணப்பத்தில் தேவையான தகவல்களைப் பூர்த்தி செய்து, இதுவரை சங்கத்திற்கு அனுப்பாதவர்கள், உடனே அனுப்பும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சங்கத்தின் தேர்தல்களில் வாக்களிப்பதற்கும், சங்கம் அளித்துவரும் சலுகைகளைப் பெறுவதற்கும் புதியதாக வழங்கப்படவுள்ள அடையாள அட்டை அவசியம் தேவைப்படும். எனவே இதுவரை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து அனுப்பாத உறுப்பினர்கள் இனியும் காலம் தாழ்த்தாது உடனே அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

‘தீரன் சின்னமலை மாளிகை’ கட்டட நிதிக்கு இதுவரை ரூ. 1000/– அனுப்பாத சங்க உறுப்பினர்கள், உடனே அனுப்பிட அன்புடன் வேண்டுகிறோம். ரூ.1000/– அனுப்பாத சங்க உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதால், கட்டட நிதியை உடனே சங்கத்திற்கு அனுப்புமாறு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

❖❖❖❖❖

## சங்கச் செய்தி

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் இணையதள முகவரி மாற்றப்பட்டுள்ளது.

www.kongunanbargalsangam.com

உறுப்பினர்கள் இனிமேல் புதிய இணையதளத்தைப் பயன்படுத்தி சங்கச் செய்திகளை அறிந்துகொள்ள வேண்டுமென அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம். ‘கொங்கு நண்பர்கள் இதழ்’ இந்த இணையதளத்தில் முழுமையாக வெளியிடப்படுகிறது. உலக முழுவதிலும் உள்ள கொங்குச் சொந்தங்கள் இதைப் படித்துப் பயன்பெறலாம்.

பரணி **கே. பாலசுப்பிரமணி**
தலைவர்

**ஆர். செல்வராஜ்**
செயலாளர்

❖❖❖❖❖

அடையாள அட்டை விண்ணப்பம்

# கொங்கு நண்பர்கள் சங்கம்

**வெள்ளி விழா இல்லம்**

நெ.34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.

Membership No. / உறுப்பினர் எண் :

Name / பெயர் :

Father's Name / தகப்பனார் பெயர் :

Date of Birth / பிறந்த தேதி :

Edu. Qualification / கல்வித்தகுதி :

Occupation / தொழில் :

Koottam & Kula Deivam
கூட்டம் & குல தெய்வம் :

Photo

| Native Address<br>சொந்த ஊர் முகவரி | Present Address<br>தற்போதைய முகவரி | Office Address<br>அலுவலக முகவரி |
|---|---|---|
| Ph : | Ph : | Ph : |

Cell Number: E-mail ID :

Family Details / குடும்ப விவரம்

| Name<br>உறுப்பினர் பெயர் | Date of Birth<br>பிறந்த தேதி | Relationship<br>உறவுமுறை | Education / Employment<br>படிப்பு / தொழில் | Blood Group<br>இரத்தப் பிரிவு | Land Line / Mobile<br>தொலைபேசி/கைபேசி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

குறிப்பு : தங்களைப் பற்றி மேலும் விபரங்களைத் தெரிவிக்க விரும்பினால் அவற்றை இத்துடன் இணைத்து அனுப்பவும்.

Signature
கையொப்பம்

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பொன்விழா

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 1961 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 2011 ஆம் ஆண்டு 50 ஆண்டுகளை நிறைவு செய்தது. இதைக் குறிக்கும் வகையில் 2012 ஆம் ஆண்டு குடும்பவிழா பொன்விழாவாக சென்னை காமராஜர் அரங்கத்தில் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

காமராஜர் அரங்கம், அண்ணாசாலை தோரணங்களாலும், வண்ணப்படங்களாலும், அலங்கரிக்கப்பட்டிருந்தன. காமராஜர் அரங்க மேடை தீரன் சின்னமலை, காலிங்கராயன் படங்களுடன் எழிலுடன் அமைக்கப்பட்டிருந்தது. காலை எட்டுமணியிலிருந்து கொங்குச் சொந்தங்கள் குடும்பத்தோடு உற்சாகமாக வரத்தொடங்கினர். சங்க உறுப்பினர்கள் மற்றும் கொங்கு சொந்தங்களில் பெரும்பாலோர் வெள்ளை சட்டை, வேட்டியுடன் விழாவிற்கு வந்திருந்தது கொங்குச் சமுதாயத்தின் கலாசாரத்தையும், பண்பாட்டையும் பறைசாற்றுவதாக இருந்தது. கோவை கொங்கு கிராமிய ஒயிலாட்டம், கிராமிய வாத்தியங்கள் முழக்கம், கொங்கு மணம் கமழ வண்ண வண்ண உடைகளில் பெண்டிர், குழந்தைகள், கொங்குத் திருமண நிகழ்வை நினைவூட்டும் அளவளாவுதல், சந்திப்புகள் ஆகியன குடும்ப விழாவிற்குக் கட்டியம் கூறின.

காலை 9.30 மணிக்குள் வந்தவர்கள் அனைவருக்கும் இன்சுவை சிற்றுண்டி வழங்கப்பட்டது. சங்கத்தலைவர் திரு.பரணி கே.பாலசுப்பிரமணி, செயலாளர் திரு. ஆர்.செல்வராஜ், பொருளாளர் திரு.கே.கே.ரமேஷ், துணைத்தலைவர்கள் திரு.பி.சென்னியப்பன், திரு.கே.ஏ.கணபதி மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் விழாவிற்கு வந்த அனைவரையும் அரங்கத்தின் வாசலில் நின்று இருகரம் கூப்பி வரவேற்றனர். கொங்குக் குலச்செல்விகள் சந்தனம் தெளித்து, கற்கண்டு கொடுத்து இன்முகத்தோடு வரவேற்றனர். 9 மணி அளவிலேயே விழா அரங்கம் நிறைந்துவிட்டது அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தது. பொன்விழாவின் சிறப்பையும், சங்கத்தின்பால் உறுப்பினர்கள் கொண்டுள்ள ஈடுபாட்டையும் காட்டுவதாக இது இருந்தது.

விழாத்தலைவர் தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார், திரையுலக மார்கண்டேயர்

திரு.சிவகுமார், சங்கத்தலைவர் திரு.பரணி கே.பாலசுப்பிரமணி, செயலாளர் திரு.ஆர்.செல்வராஜ், பொருளாளர் திரு.கே.கே.ரமேஷ் ஆகியோர் மேடையை அலங்கரித்தனர். சங்கத்தின் முன்னாள் செயற்குழு உறுப்பினரும், தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளராகவும், நிகழ்ச்சிகள் நடத்துபவராகவும் புகழ்பெற்றுள்ள திருமதி நிர்மலா பெரியசாமி விழா நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கத் தொடங்கினார்.

கடவுள் வாழ்த்துப்பாடலுடனும், அதைத்தொடர்ந்து செல்வி யாழினி கொங்குவேள், செல்வி அமுதினி கொங்குவேள் இணைந்து தேனிசைக் குரலில் செந்தமிழ்த்தாய் வாழ்த்துடனும் நிகழ்ச்சிகள் தொடங்கின. கடந்த ஓராண்டில் இயற்கை எய்திய சங்க உறுப்பினர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

2012 ஆம் ஆண்டு பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் கொங்குச் சமுதாயத்தில் முதன் மூன்று இடங்களைப் பெற்ற டி.கவின், ஸ்வாதி சென்னியப்பன் (முதல் இடம்), டி.வினுமிதா, கே.ஷர்மிளா, பி.கே.பூஜாஸ்ரீ (இரண்டாம் இடம்), விஸ்ணுப்பிரியா, பி.முகிலன், டி.இலக்கியா, பி.ராகுல் (மூன்றாம் இடம்) ஆகியோருக்கும், பன்னிரண்டாம் வகுப்பில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற ஜெ.ஹேமப்பிரியா, சி.மணிகண்டன் (முதல் இடம்), பி.நிவேதா (இரண்டாம் இடம்), பி.கே.உத்ரா (மூன்றாம் இடம்) ஆகியோருக்கும் பரிசும், பதக்கமும், சான்றிதழும் வழங்கப்பட்டன.

நாமக்கல் செல்வன் கே.எம்.சித்தார்த், பெங்களூரு செல்வன் பி.மனோஜ் ஆகிய இருவருக்கும் 'கொங்கு இளம் சாதனையாளர்' விருதும், ஈரோடு, திரு.கே.பி.துரைசாமி, கோவை திரு.டி.இராமகிருஷ்ணன், திருப்பூர் திரு. எஸ்.உமாபதி ஆகிய மூவருக்கும் 'கொங்கு வேளாண் சாதனையாளர்' விருதும், டாக்டர் கே.கே.லட்சுமணன் திரு. கே.சி.கருப்பன், டாக்டர் கே.அர்த்தநாரி, திரு.என்.சின்னசாமி, திரு.கா.நல்லதம்பி, திரு. எம்.மணி, கொங்குநாடு திரு.கே.முத்துசாமி, திரு.டி.சங்கர், திரு.கிருபா புஷ்பராஜ், திரு. ஆர்.ராமச்சந்திரன் IAS., ஆகியோருக்கு 'கொங்கு சாதனையாளர்' விருதும் வழங்கப்பட்டன. திரு.கருணாகரன் அவர்களுக்கு 'வெளிநாடு கொங்கு சாதனையாளர்' விருது வழங்கப்பட்டது.

சங்க வளர்ச்சிக்கு கொங்குமாமணி டாக்டர் பழனி ஜி.பெரியசாமி அவர்கள் ரூ. 50,000, திரு. பூபதி ரூ. 10,000, வணக்கத்துக்குரிய மேயர் சைதை துரைசாமி அவர்கள் ரூ. 10,00,000/– வழங்குவதாக அறிவித்தனர்.

பொன்விழா சிறப்பு மலரை தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் வெளியிட, முதற்பிரதியை திரு. சிவகுமார் அவர்கள் பெற்றுக்கொண்டார். 'சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் – 50 ஆண்டு வரலாறு (1961–2011)' என்ற சங்கத்தின் வரலாற்று நூல் விழாவில் வெளியிடப்பட்டது. சக்திமசாலா நிர்வாக இயக்குநர் கொங்குமாமணி திரு.பி.சி.துரைசாமி அவர்கள் நூலை வெளியிட, மூத்த வழக்கறிஞரும், சங்கத்தின் நிறுவனர்களில் ஒருவருமான திரு.இரா.காந்தி அவர்கள் முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார். இந்த வரலாற்று நூலை எழுதிய முனைவர் மணிமேகலை புஷ்பராஜ், நூலாக்கத்திற்கு உதவி புரிந்த திரு.நா.புஷ்பராஜ் ஆகியோர் விழாவில் சால்வை அணிவித்துப் பாராட்டப்பட்டனர். ரூ. 150 விலையுள்ள இந்த நூல், விழாவன்று மட்டும் ரூ. 100க்கு விற்கப்பட்டது. பொன்விழா மலர் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்பட்டது.

சங்க வரலாற்று நூல் பற்றிய விளக்கத்தைக் கூற வந்த சங்கத் தலைவர் திரு.பரணி கே.பாலசுப்பிரமணி சங்க வரலாற்றையே சுருக்கமாகக் கூறி முடித்தார். சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் விழாவில் கௌரவிக்கப்பட்டனர்.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக திரையுலக மார்கண்டேயர் திரு.சிவகுமார் அவர்களுக்கு சிலம்பொலி செல்லப்பனார் 'கொங்குமாமணி' விருது வழங்கிப் பாராட்டினார். திரு. கிருபா புஷ்பராஜ், திரு.ஆர்.கருணாகரன், திரு.இராமசாமி ஆகியோர் விருது பெற்றவர்கள் சார்பில் ஏற்புரை வழங்கினர். திரு. சிவகுமார் அவர்கள் மிக அருமையானதொரு சொற்பொழிவை நிகழ்த்தினார். கம்பன் பாடல்கள், கண்ணதாசன் பாடல்கள், பாரதியார் பாடல்கள் முதலானவற்றை அவர் நினைவாற்றல் கொண்டு கூறியது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. அவர் வாழ்க்கைப் பாதையை கோடிட்டுக் காட்டினார். அது இராஜ பாட்டை அல்ல என்பது விளங்கியது. கலையுலகில் உழைப்பால் உயர்ந்து பெரும் சாதனைபடைத்தவர் என்பதோடு தன்னுடைய தனித்தன்மையுடைய சிறப்பு மிகு

சொற்பொழிவுகளால் தமிழர்களின் உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொண்ட திரையுலகச் சிற்பியின் வரலாற்றுப் பாதை அனைவரையும் வியக்கவைத்தது எனலாம்.

சிலம்பொலி செல்லப்பனார் தமது தலைமையுரையில் விருது பெற்ற அனைவரையும் பாராட்டினார். திரு.சிவகுமார் அவர்களின் சொல்லாற்றல், நினைவாற்றல், அயரா உழைப்பு, நெறியான வாழ்க்கை, தமிழ்மேல் கொண்ட காதல் முதலானவை அவரை ஒருதலைசிறந்த சொற்பொழிவாளராக ஆக்கியுள்ளது என்று கூறினார். கொங்குச் சமுதாயப்பெருமக்கள் உழைப்பு, நேர்மை, எளிமை ஆகிய பண்புகளைக் கொண்டு மற்ற சமுதாயத்திற்கு வழிகாட்டியாக விளங்கவேண்டும் என்றும், கொங்கு சமுதாயக் கல்வியாளர்கள், ஏழை மாணவர்களுக்கு தரமான கல்வியைக் குறைந்த செலவில் வழங்க வேண்டுமென்றும், தமிழர்கள் தங்களுக்குள் தமிழில் பேச வேண்டும் என்றும், தமிழ்ப் பெயர்களைக் குழந்தைகளுக்கு வைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். செயலாளர் திரு.ஆர்.செல்வராஜ் ஆண்டறிக்கை வாசித்ததோடு, சங்கத்தின் செயல்பாடுகளை விவரித்தார். காலை நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவடைந்தன. பொருளாளர் திரு.கே.கே.ரமேஷ் நன்றியுரையாற்றினார். சாதனையாளர்கள் பற்றிய குறிப்புகளை திருமதி உத்தமி பொன்னுசாமி, முனைவர் மணிமேகலை புஷ்பராஜ் வாசித்தனர். திரு.பி. அருள் திரையில் புகைப்படங்களை வெளியிட்டார். திருமதி நிர்மலா பெரியசாமி தனக்கேயுரிய பாணியில் நிகழ்ச்சிகளை அழகாகவும், அருமையாகவும் தொகுத்து வழங்கினார்.

மதிய அறுசுவை உணவு வழங்கப்பட்டது. சைவ உணவு, அசைவ உணவு தனித்தனியே இருந்தன. சுமார் 3000 பேர் இருந்ததால் சாப்பிட இடம் கிடைக்கச் சிறிது தாமதமானது. கீழ் பவானி பாசன விவசாயிகள் சங்கத் தலைவரும், கள் இயக்கத் தலைவருமான திரு. செ.நல்லசாமி அவர்கள் கொங்குச் சமுதாய இளைஞர்களும், பெண்களும் இளம்வயதிலேயே திருமணம் புரிந்துகொள்வது அவசியம் என்றும், திருமண வயதைத் தள்ளிப்போடுவது இயற்கைக்கு மாறானது என்றும், வள்ளுவர் காட்டிய வழிக்கு எதிரானது என்றும் வலியுறுத்தினார்.

மாலையிலும் கொங்கு கிராமிய ஒயிலாட்டம் மனத்தைக்கொள்ளை கொள்வதாக இருந்தது. சங்கத்தின் பொன்விழாவை முன்னிட்டு கொங்குச் சமுதாயத்திற்குப் பெரிதாக

ஏதாவது செய்ய வேண்டும் என்று எண்ணிய சங்கத்தலைவர் திரு. பரணி கே.பாலசுப்பிரமணி அவர்களின் முயற்சியால் கொங்கு IAS அகாடமி என்ற அமைப்பு தொடங்கப்பட்டது. திரு.சிவகுமார் அவர்கள் தலைவராகவும், திரு.பரணி கே.பாலசுப்பிரமணி செயலாளராகவும், திரு.பி.சி.துரைசாமி அவர்கள் பொருளாளராகவும் பொறுப்பேற்றனர். கரூர், ஈரோடு, கோவை போன்ற இடங்களில் தேர்வுகள் நடத்தப்பட்டு, திறமை மிகுந்த, வசதி குறைந்த மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு தக்க பயிற்சி அளித்து, நிறைய IAS அலுவலர்களை உருவாக்க வேண்டும் என்பதை இலட்சியமாகக்கொண்டு இந்த அமைப்பு தொடங்கபபட்டது. அந்த அமைப்புக்கு ரூ. 30 இலட்சம் நன்கொடைகள் குவிந்தன.

திரைப்பட முன்னணி நட்சத்திரங்கள் சூர்யா, கார்த்தி ஆகிய இருவரின் தேதி பெற்று ஒரு நட்சத்திரக் கலைவிழாவை நடத்தி சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் நிதி நிலையைப் பெருக்கி காமராஜர் அரங்கம் போன்ற ஓர் அரங்கத்தைக் கட்டவேண்டும் என்றும், அதற்கு தான் உதவத் தயாராக இருப்பதாகவும், ஏற்கனவே நட்சத்திர நிகழ்ச்சிகள் நடத்த உதவிகள் புரிந்த திரையுலக மார்கண்டேயர் திரு.சிவகுமார் அவர்கள் கூறினார்.

பின்னர், சன் டி.வி.புகழ் அசத்தல் மன்னர்கள் நகைச்சுவை விருந்தளித்தனர். அதிர்ஷ்டப் பரிசுகள் ஐந்து குலுக்கல் முறையில் கொடுக்கப்பட்டன. சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் விழா முடிந்து திரும்பும் வேளையில் ஓர் தட்டு, பொன்விழா மலர் போன்ற பொருள்கள் கொண்ட All Times நிறுவனத்தினரால் நன்கொடையாக அளிக்கப்பட்ட ஓர் அழகிய பை வழங்கப்பட்டது. இரண்டு ஆண்டுகள் சங்கத்தைச் சிறப்பாக வழி நடத்தி சாதனைகள் பல புரிந்த தலைவர் திரு. பரணி கே.பாலசுப்பிரமணி, செயலாளர் திரு.ஆர்.செல்வராஜ், பொருளாளர் திரு.கே.கே.ரமேஷ், துணைத்தலைவர்கள் திரு.பி.சென்னியப்பன், திரு.கே.ஏ.கணபதி, இணைச்செயலாளர்கள் டாக்டர் கே.ஆர்.பி.சண்முகம், திரு.எஸ்.ஆர்.இராஜேந்திரன் மற்றும் அனைத்து செயற்குழு உறுப்பினர்களுக்கும் திரு.சிவகுமார் அவர்கள் நினைவுப்பரிசு வழங்கினார். பொன்விழா மலருக்கு வந்த விளம்பரங்கள் மூலம் ரூ. 30 இலட்சம் கிடைத்ததில் விழாச்செலவு போக மீதித் தொகை சங்க நிதியில் சேர்க்கப்பட்டது. மகிழ்ச்சியும், உற்சாகமும் கொண்ட உள்ளத்துடன் கொங்குச் சொந்தங்கள் விடைபெற்றனர்.

❖❖❖❖❖❖❖

# என்றும் நலமுடன் வாழ

## பக்கவாதம் ஒரு தடுக்க கூடிய நோயே

பத்மஸ்ரீ கொங்குமாமணி வி.எஸ்.நடராசன்
முதியோர் மருத்துவர்



மேலை நாட்டில் ஐம்பது வயது மேற்பட்டவரிடம் ஒரு கணக்கெடுப்பு செய்யப்பட்டது. அதாவது உங்களுக்கு முதுமைக் காலத்தில் பக்கவாதம் அல்லது மாரடைப்பு, இந்த இரண்டில் எந்த நோய் உங்களுக்கு வர வேண்டும் என்று கேட்டதற்கு, அத்தனை பேரும் சொன்ன ஒரே பதில் மாரடைப்பு நோயைத்தான். ஏனென்றால் மாரடைப்பில் திடீர் மரணம் ஏற்பட்டு, சிரமம் இல்லாமல் வாழ்க்கை முடிந்துவிடும் அல்லது அறுவை சிகிச்சை மற்றும் மாத்திரைகள் மூலம் யாருடைய உதவியும் இன்றி நீண்ட நாட்கள் வாழலாம். ஆனால் பக்கவாதம் ஏற்பட்டால் முழுமையாக குணம் அடைவது சிரமம். மேலும் வாழ்நாள் முழுவதும் மற்றொருவரின் உதவியும் தேவைப்படும்.

**பக்கவாதம் எப்படி ஏற்படுகிறது ?**

மூளைக்குச் செல்லும் ரத்த ஓட்டம் தடைபடுவதால் மூளையிலுள்ள செல்கள் செயலிழந்து, பக்கவாதம் ஏற்படுகிறது.

பக்கவாதத்தின் ஆரம்ப அறிகுறிகள்

- திடீரென்று முகம், கை, கால்கள் ஒரு பக்கம் பலவீனம் அடைதல், மரத்துப்போதல் அல்லது செயலிழத்தல்
- கண் பார்வையில் திடீரென்று மாற்றம் ஏற்படுதல், பார்வை மங்குதல், இரட்டைப் பார்வை, கண் செயலிழத்தல்
- திடீரென்று வாய் குளறுதுல், மனக்குழப்பம், மற்றவர்களைப் புரிந்துகொள்ளாத நிலை, திடீரென்று நடைதள்ளாடுதல், மயக்கம், எந்தக்காரணமும் இல்லாமல் தாங்க முடியாத தலைவலி.

**பக்கவாதம் வருவதற்காக காரணங்கள்**

ஐம்பது வயதைக் கடந்தவர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை பக்கவாதம் வர வாய்ப்பு இரண்டு மடங்காக உயரும். ஆண்களுக்கு 55 வயது வரை பெண்களைவிட 30 சதவிகிதம் வாய்ப்புகள் அதிகம். அதற்குப்பின் இருபாலருக்கும் சமமாக வரும்.

- குடும்பத்தில் பெற்றோர்களுக்கோ அல்லது அவர்களின் சந்ததியினருக்கோ பக்கவாதம் வந்தால், அவர்கள் குடும்பத்தில் உள்ளவர்களுக்கும் வர வாய்ப்பு உண்டு.

. லேசான பக்கவாதம் வந்தவர்களுக்கு மீண்டும் பெரிய அளவில் வர வாய்ப்பு உள்ளது.

. உயர் ரத்த அழுத்தம், நீழிரிவு நோய், மாரடைப்பு நோய், இதயம் வலிமை இழத்தல், சீராக இயங்காமல் விட்டு விட்டு இயங்கும் இதயத் துடிப்பு உள்ளவர்கள்.

. புகை பிடித்தல், மற்றவரின் புகையைச் சுவாசித்தல், அளவுக்கு அதிகமாக மது அருந்துதல், ரத்தத்தில் அதிகக் கொழுப்புச்சத்து, உடற்பருமன், உடல உழைப்பின்றி சும்மா இருப்பவர்களுக்கும் பக்கவாதம் வருவதற்கான வாய்ப்பு இருக்கின்றன.

**சிகிச்சை**

பக்கவாதம் வந்தவுடனே முதலில் ரத்த அழுத்தம், ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு இசிஜி போன்ற அடிப்படை பரிசோதனைகளைச் செய்வார்கள். ஆனால், மிகவும் முக்கியமான பரிசோதனை, மூளை ஸ்கேன். இதன் மூலம் ஒருவருக்கு மூளையில் ரத்த ஓட்டம் குறைந்து இருக்கிறதா, அல்லது ரத்தக்கசிவு ஏற்பட்டு உள்ளதா என்று உறுதியாகக் கண்டறிய முடியும். ரத்தக்கட்டி அடைப்பால் மூளைக்கு ரத்த ஓட்டம் குறைந்திருந்தால் அந்தக்கட்டியை கரைக்க ஆஸ்பிரினுடன் ரத்தம் உறையாமல் இருக்கும் மாத்திரையைக் கொடுத்து மூளைக்கு ரத்த ஓட்டத்தைச் சீர்செய்ய முடியும்.

பக்கவாதம் ரத்தக் கசிவினால் ஏற்பட்டிருந்தால் அது சாதாரணமாக உயர் ரத்த அழுத்தத்தினால் வர வாய்ப்பு உண்டு. அவர்களுக்கு ரத்த அழுத்தத்தைக்குறைக்கும் மாத்திரையைக் கொடுப்பார்கள். இத்துடன் அவருக்கு இயன்முறை சிகிச்சையும் (பிஸியோதெரபி) கொடுக்க வேண்டும். எல்லாவற்றையும் விட முக்கியம், மன உறுதி தான். பக்கவாதத்திலிருந்து சரியாகி மறுபடியும் பழைய நிலைக்கே வந்து நடக்க ஆரம்பித்து விடுவேன் என்ற மன உறுதி நோயாளருக்கு இருக்க வேண்டும்.

**வராமல் தடுக்க**

உங்கள் குடும்ப மருத்துவரிடம் தவறாமல் சென்று உங்களுக்கு ரத்த அழுத்தம், நீரிழிவு நோய், இதய நோய், உடல் பருமன், உடல் கொழுப்புச்சத்து அதிகம் உள்ளதா என்பதைக் கண்டறிந்து தக்க சிகிச்சை செய்துகொள்ள வேண்டும்.

தவறாமல் செய்யும் உடல் பயிற்சிக்கும் பக்கவாதத்தை வராமல் தடுக்கும் சக்தி உண்டு. மனப்பதற்றம், மன உளைச்சல் ஆகியவற்றைத் தவிர்க்க தியானம் மற்றும் பொழுதுபோக்குக் கலைகளில் மனதைச் செலுத்த வேண்டும்.

எந்தளவுக்கு காலம் தாழ்த்தாமல் சிகிச்சை பெறுகிறீர்களோ, அந்த அளவுக்கு நோயிருந்து விடுதலை கிடைக்கும். முதல் 3 6 மணி நேரங்கள் பொன்னான உயிர்காக்கும் நேரம். அந்த நேரத்தை வீணடித்துவிடாதீர்கள். பக்கவாதம் தடுக்கக் கூடியது, ஏன் குணப்படுத்தக்கூடிய நோயும்கூட!

**கேள்வி பதில்**

**திரு. வேலுசாமி கவுண்டர், மொடக்குறிச்சி**

**கேள்வி :** நான் ஒரு விவசாயி, வயது 70 ஆச்சு. எனக்கு ரொம்பநாளா ஒரு சந்தேகம், வயசு

ஆனா பசி எடுக்காதும்பாங்க. ஆனா எனக்கு ரொம்ப பசி எடுக்குது. எவ்வளவு தின்னாலும் செரிச்சுப்போவது. உடல்லே ஏதாவது சீக்கு இருக்குமோன்னு ஒரு சந்தேகம். உங்களோட பதிலுக்கப்புறம் தான் டாக்டரிடம் போகலாமா வேண்டாமா என்று முடிவு பண்ணனும். பதில் போடுங்க சார்.

**பதில் :** இதுவரை அதிகம் யாரும் கேட்காத கேள்விகளை நீங்கள் கேட்டதற்கு, என்னுடைய பாராட்டுகள். உங்களுடைய கேள்வி முற்றிலும் நியாயமானதே. வயது ஆக ஆக பசியும், ருசியும் குறையும். ஆகையால்சாப்பிடும் அளவும் குறையும்.

பொதுவாக பசி சற்று அதிகம் எடுப்பதற்கான காரணங்கள் என்ன என்று பார்ப்போம்.

- மகிழ்ச்சியான, உற்சாகமான மனநிலை இருக்கும் போது அதிகம் பசி எடுப்பது போலத் தோன்றும். மேலும் அப்போது நாம் எவ்வளவு உணவு உட்கொள்கிறோம் என்பதை நாம் கண்டுகொள்வதில்லை.
- உடல் தைராய்டு என்னும் ஹார்மோன் அதிகமாகச் சுரக்கும் போது அதிகப் பசி எடுக்கும். அதிகப் பசி எடுத்து, அதிக உணவு உட்கொண்ட போதிலும், உடல் மெலிந்தே காணப்படும்.
- மருந்துகள் : அலர்ஜிக்கு கொடுக்கும் மாத்திரை. உதாரணம் : அவில், சிட்ரசின் மாத்திரைகள், ஸ்ட்டீராய்ட்ஸ் போன்ற மாத்திரைகள்.
- நீரிழிவு நோய் – உடலில் உள்ள சர்க்கரையின் அளவு தீடீரென்று குறைந்தால் பசி மிக அதிகமாக எடுக்கும். நெஞ்சு படபடக்கும். உடம்பு வியர்த்துக்கொட்டும். சிறிது சர்க்கரை அல்லது சாக்லெட் எடுத்துக்கொண்டால் எல்லாமே உடனே சரியாகிவிடும்.
- மது – பசியை முதலில் தூண்டும். நாள்பட இப்பழக்கம் பசியைக் குறைக்கும். குடல் புண் – ஏற்பட்டால் அடிக்கடி பசி எடுக்கும். சாப்பிட்டவுடன் வயிற்றில் தோன்றும் தொல்லை குறையும்.
- உணவுப் பிரியர்கள், தங்கள் துக்கங்களை மறக்க அதிகம் உண்டு, அதில் ஆறுதல் அடைவதும் உண்டு.
- Obsessive compulsive disorder என்னும் மனநோய் இருப்பவர்கள் ஏதேனும் ஒரு செயலை மீண்டும் மீண்டும் தொடர்ந்து செய்து கொண்டுஇருப்பர். இந்த நோயில் ஒரு வகை, தொடர்ந்து உணவு உண்டு கொண்டே இருப்பர்.
- வயதான காலத்தில் டிமென்சியா என்றும் மறதி நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் சிலருக்கு பசி அதிகம் எடுக்க வாய்ப்புண்டு. உணவு எவ்வளவு பரிமாறினாலும் போதும் என்றே சொல்லமாட்டார்கள்.

ஆகையால் நீங்கள் உங்கள் குடும்ப டாக்டரிடம் சென்று மேற்குறிப்பிட்ட தொல்லைகள் ஏதாவது உங்கள் அதிகப்பசிக்கு காரணமா என்று தெரிந்து கொள்ளுங்கள். அப்படிப் பெரிதாக ஏதும் இல்லை என்றால், நீங்கள் கொடுத்து வைத்தவர். நன்றாக உண்டு (எடை கூடாமல்) வாழ்க்கையை அனுபவியுங்கள். ஆம் வாழ்க்கை வாழ்வதற்கே !

(உதவி : செல்வி திவ்யா, சென்னை மருத்துவக் கல்லூரி மாணவி)

❖❖❖❖❖❖❖❖

# மணமகள் தேவை

ஜாதகர் பெயர் : P.ரமேஷ் BE., MBA

பிறந்த தேதி : **06–04–1983.** புதன் 05.20 a.m. கள்ளக்குறிச்சி

நட்சத்திரம் : உத்திராடம் 1ம் பாதம், தனுசு ராசி

மீனம் லக்கனம் செவ்வ 2ல்

தந்தை தாய் பெயர் : எம்.பழனிசாமி, நல்லம்மாள்

முகவரி : **641**, கொங்கு நகர், நல்லாத்தூர்,

கள்ளக்குறிச்சி tk, விழுப்புரம் Dt

தொழில் : Software Engineer

Verizon, Chennai

கூட்டம் : செம்பொன் குலம், பெரிய

மணலி காளியம்மன் கோயில்

தொடர்புக்கு : 9789939013, 94869 24293

| | | | |
|---|---|---|---|
| ல / சூ | சுக் புதன் செவ் | | ராகு |
| | இராசி | | |
| | | | |
| கேது சந் | குரு | சனி | |

| | | | |
|---|---|---|---|
| | புதன் | கேது | செவ் |
| | நவாம்சம் | | |
| சூ | | | ல |
| கு, சந் சனி, சுக் | ராகு | | |

❖❖❖❖❖

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

'கொங்கு மாமணி' விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட சான்றோர்கள்

**2001 ஆம் ஆண்டு**

1. தெய்வத்திரு.கே.எம்.சென்னியப்பன்
2. டாக்டர். பழனி ஜி.பெரியசாமி
3. திரு. ஜெம் ஆர். வீரமணி

**2002 ஆம் ஆண்டு**

4. திரு. எஸ்.வி.பாலசுப்பிரமணியம்
5. திரு. இரா. காந்தி

**2003 ஆம் ஆண்டு**

6. திரு. டி.ஆர்.கார்த்திகேயன், I.P.S. (Retd.)
7. திருச்சி. ஆர். தேவராசன்
8. திரு. ஜி.ஆர்.சுந்தரவடிவேல்

**2004 ஆம் ஆண்டு**

9. முனைவர் சிலம்பொலி சு.செல்லப்பன்
10. டாக்டர் சி.பழனிவேலு
11. டாக்டர். பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர்

**2005 ஆம் ஆண்டு**

12. NSIT. திரு. எம்.முருகேசன்
13. திரு. கே.பழனியப்பன்
14. திரு.சி.கே.இராமசாமி

### 2006 ஆம் ஆண்டு

15. திரு.நல்லா கோவிந்தசாமி
16. சக்திமசாலா திரு.பி.சி.துரைசாமி
17. திரு. வி.கே.தங்கவேல்

### 2007 ஆம் ஆண்டு

18. புலவர் செ.இராசு
19. திரு. பெஸ்ட் எஸ்.இராமசாமி
20. பத்மஸ்ரீ டாக்டர். க.ரா.பழனிசாமி

### 2008 ஆம் ஆண்டு

21. ஆடிட்டர் மு.பாலசுப்பிரமணியம்
22. டாக்டர் என்.எம்.வீரய்யன்
23. தெய்வத்திரு. ப.செங்கோடன்

### 2009 ஆம் ஆண்டு

24. டாக்டர் வி.எஸ்.நடராஜன்
25. திரு.கே.செல்லமுத்து
26. பத்மஸ்ரீ ஏ.சக்திவேல்

### 2011 ஆம் ஆண்டு


27. அட்லஸ் எம்.நாச்சிமுத்து
28. கே.ஏ.செங்கோட்டுவேல்

**“கொங்குமாமேதை” விருது பெற்றவர்**

அருட்செல்வர் டாக்டர். நா.மகாலிங்கம்

(2006 ஆம் ஆண்டு)

# கொங்கு மாமணி



## திரையுலக மார்கண்டேயர் திரு. சிவகுமார்

கோவை மாவட்டம் சூலூர் அருகிலுள்ள காசிகவுண்டன் புதூர் கிராமத்தைச் சேர்ந்த அமரர் திரு. ராக்கியா கவுண்டர் – அமரர் திருமதி பழனியம்மாள் தம்பதியரின் மகனாக 1941 ஆம் ஆண்டு பிறந்தவர் திரையுலக மார்கண்டேயர் சிவகுமார் அவர்கள்.

சூலூர் கழக உயர்நிலைப்பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சி முடித்தார். பள்ளியில் படிக்கும்போதே ஓவியம், மாறுவேடப்போட்டி, பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி முதலான போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகள் பல பெற்றவர். ஓய்வு நேரங்களில் ஓவியம் வரைவது இவருக்குப் பொழுதுபோக்காகவும், பிடித்த ஒன்றாகவும் இருந்தது.

எஸ்.எஸ்.எல்.சி. படிப்பு முடிந்ததும் ஓவியக்கலையின் மேல் கொண்ட காதலால் சென்னை ஓவியக்கலைக் கல்லூரியில் சேர்ந்து ஆறு ஆண்டுகள் ஓவியக்கலையில் மேற்படிப்பு படித்து, முதல்வகுப்பில் தேர்ச்சி பெற்றார். இந்த ஆறு ஆண்டு கல்லூரி வாழ்க்கை அவரை ஒரு சிறந்த ஓவியராக்கியது. ஓர் ஓவியருக்கு வேண்டிய கற்பனைத் திறன், ஆழ்ந்த சிந்தனை, ஒழுக்கம், நிதானம், பொறுமை, விடா முயற்சி, கலையில் பற்று, சாதிக்கும் வைராக்கியம் போன்ற சிறந்த குணங்களை சிவகுமார் அவர்கள் பெற்றுள்ளதால், அவரால் ஒரு சிறந்த ஓவியர் என்ற பரிணாமத்தை அடைய முடிந்தது.

திறமை வாய்ந்தவர்களையும், தகுதி வாய்ந்தவர்களையும் திரையுலகம் தேடிச் சென்ற காலமது. அதே சமயத்தில் திறமை குறைந்தவர்கள் அதிர்ஷ்டத்தாலோ, பரிந்துரை பேரிலோ, பண பலத்தாலோ திரையுலகில் காலூன்றி நின்றுவிட முடியாத காலம் அது. திறமை குறைந்தவர் ஓரிரு படத்தில் நடித்தாலும், மக்கள் அவர்களை நிராகரித்துவிடுவர். இந்தக் காலக்கட்டத்தில் அழகும், நடிப்புத் திறமையும், உடல் கட்டமைப்பும், இனிய பண்புகளும் நிறைந்திருந்த சிவகுமார் அவர்களுக்கு திரைப்படத்துறையில் பெரிய ஜாம்பவானாக விளங்கிய AVM நிறுவனம் தயாரித்த 'காக்கும் கரங்கள்' என்ற படத்தில் நடிக்கும் அரிய வாய்ப்பு கிடைத்தது. 1965 ஆம்ஆண்டு படம் வெளிவந்தது. திரு. சிவகுமார் அவர்களுக்குப் பாராட்டுகள் குவிந்தன.

இதன் விளைவாக வாய்ப்புகள் தேடிவந்தன. இதுவரை 192 படங்களில் நடித்து மாபெரும் சாதனை படைத்துள்ளார். இதில் 175 படங்களில் கதாநாயகனாக நடித்து பெரும்

புகழ் பெற்றார். கந்தன் கருணை, உயர்ந்த மனிதன் அன்னக்கிளி, பத்ரகாளி, சொல்லத்தான் நினைக்கிறேன், ரோசாப்பூ ரவிக்கைக்காரி, ஏணிப்படிகள், வண்டிச் சக்கரம், பௌர்ணமி அலைகள், சிந்து பைரவி, மறுபக்கம் முதலான படங்கள் இவருக்குப் பெரும் புகழ் சேர்த்த படங்களாகும். ஒவ்வொரு படத்திலும் அந்தப் பாத்திரமாகவே மாறி விடுவது அவருக்குள்ள தனிச்சிறப்பாகும். சின்னத்திரையிலும் தன் முத்திரையைப் பதித்தவர்.

‘மறுபக்கம்’ படத்திற்கு மத்திய அரசின் ‘தங்கத்தாமரை’ விருது கிடைத்தது. மறுபக்கம் படத்தில் மிகச்சிறப்பாக, மிகவும் அருமையாக, மிகவும் அற்புதமாக நடித்த இவருக்கு மத்திய அரசின் சிறந்த நடிகர் விருது கிடைப்பதாக இருந்தது. கடைசி நேரத்தில் சிலர் செய்த சதியால் அந்த விருது கிடைக்கவில்லை. ஆனால் மக்கள் மனத்தில் சிறந்த நடிகர் எனப்பெயர் பெற்று விட்டார்.

மாநில அரசின் ‘சிறந்த நடிகர்’ விருதை மூன்று முறையும், ஃபிலிம் ஃபேர் சிறந்த நடிகருக்கான விருதை இரண்டு முறையும் பெற்றுள்ளார். தமிழ்நாடு அரசு ‘வாழ்நாள் சாதனையாளர்’ விருது அளித்து இவரைக் கௌரவப்படுத்தியது. ஃபிலிம் ஃபேர் பத்திரிகையும் இவருக்கு ‘வாழ்நாள் சாதனையாளர்’ விருது அளித்து பெருமைப்படுத்தியது. திரையுலகில் நடிகர் திலகம் சிவாஜிகணேசன், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். ஆகிய இருவரின் பேரன்பையும் பெற்ற சிறப்புக்குரியவர். முதல்வர் செல்வி ஜெ.ஜெயலலிதா, கலைஞர் மு.கருணாநிதி ஆகிய இரு தலைவர்களின் அன்பையும் பெற்றவர்.

‘திரையுலக மார்கண்டேயர்’ என அன்பாக அழைக்கப்படும் திரு. சிவகுமார் அவர்களின் இளமை மற்றும் கட்டான உடற்கட்டிற்குக் காரணமாக இருப்பது அவரது சீரான உணவுப்பழக்கமும், உடற்பயிற்சியும், ஒழுக்க நெறியான வாழ்க்கை முறையுமேயாகும். 50 ஆண்டுகளாக யோகாசனப்பயிற்சி செய்து வருகிறார். புகை பிடித்தல், மது அருந்துதல், சூதாட்டம் போன்ற பழக்கங்கள் அறவே கிடையாது. காபி, தேனீர்கூட குடிப்பது கிடையாது.

திரு. சிவகுமார் ஒரு சிறந்த எழுத்தாளர். இது ‘ராஜபாட்டை அல்ல’, ‘டைரி’ ஆகிய இரண்டு வாழ்க்கை வரலாற்று நூல்களை சிறப்பாக எழுதியுள்ளார். வார இதழ்களிலும், பண்டிகை கால சிறப்பு மலர்களிலும், சான்றோர்கள் பற்றிய சிறப்பு மலர்களிலும் நிறைய கட்டுரைகளை இனிய எளிய நடையில் திறம்பட எழுதியுள்ளார்.

இவர் எழுத்தாளர் மட்டுமல்லாது சிறந்த சொற்பொழிவாளராகவும் விளங்குகிறார். இவருடைய அபார நினைவாற்றல், அயரா உழைப்பு, கொங்கு நாட்டு பேச்சு நடை, ஆழ்ந்த அறிவு முதலியன இவரைத் தமிழகத்தின் தலைசிறந்த பேச்சாளர்களுள் ஒருவராக ஆக்கியுள்ளது. கேட்போர் வியக்கும் வண்ணம், அவையைக் கட்டிப்போட்டு தங்கு தடையின்றி இவர் சொற்பொழிவாற்றும் பாங்கு அனைவராலும் பெரிதும் பாராட்டப்படுகிறது; இரசிக்கப்படுகிறது; மீண்டும் மீண்டும் கேட்க வைக்கிறது. கம்பன் என் காதரலன், தவப்புதல்வர்கள் டிவிடி க்கள் உலகப்புகழ் பெற்றவையாக தமிழ் கூறும் நல்லுலகமெங்கிலும் விளங்குகின்றன. நேரிலும், விஜய் தொலைக்காட்சி வாயிலாகவும் இவருடைய சொற்பொழிவைக் கேட்டவர்கள், வியந்து பாராட்டாமல் இருக்க முடியாது. முன்பின் முரணின்றி, சிறு பிசிறு கூட இல்லாமல் எப்படி இவரால் கம்பனின் காப்பிய வரிகளையும்,

இராமாயணக் கதைச் சுருக்கத்தையும் கையில் ஒரு சிறுகுறிப்பு கூட வைத்துக்கொள்ளாமல் இவ்வளவு சிறப்பாக, சுவையோடு கூற முடிகிறது என்று ஆச்சரியப்படாதவர்கள் மிகவும் குறைவு.

திரு.சிவகுமார் ஒரு மனித நேயப் பண்பாளர். 'சிவகுமார் கல்வி அறக்கட்டளை' மூலமாக கடந்த 33 ஆண்டுகளாக மாணவர்களுக்கு பல வகையிலும் உதவியுள்ளதோடு பரிசுகள் வழங்கி வருகிறார். சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் வளர்ச்சிக்கு பல வகையிலும் உதவியுள்ளதோடு, நிறைய நன்கொடையும் வழங்கியுள்ளார். 1977 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற 'நட்சத்திர இரவு' கலை நிகழ்ச்சி, 2001 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற 'சந்தோஷ மாலை' கலை நிகழ்ச்சி, 2002 ஆம் ஆண்டு ஈரோட்டில் நடந்த 'ஆனந்த மாலை' கலை நிகழ்ச்சி ஆகியவை நடத்திட பெரும் உதவி செய்துள்ளார். இதுவரை சங்கத்தில் யாரும் செய்யாத சாதனையாக தன்னுடைய குடும்பத்தில் 2 மகன்கள், ஒரு மகள் உட்பட நான்குபேரை சங்கத்தில் உறுப்பினராகச் சேர்த்துள்ளார். சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பற்றிய இவரது 'தவப்புதல்வர்கள்' சொற்பொழிவும், அது மக்கள் மத்தியில், குறிப்பாக இளைஞர்களிடத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கமும் இவரது நாட்டுப்பற்றுக்கும், தியாகங்களைப் போற்றும் உயர் பண்புக்கும் என்றும் சான்றாகத் திகழும்.

கம்பராமாயணத்தை அடுத்து, தற்போது மகாபாரதத்தை ஆய்வு செய்து கொண்டிருக்கிறார். சுதந்திரப் போராட்ட வீரன் தீரன் சின்னமலை சிலை அமைக்க முதல்வர் ஜெயலலிதா அவர்கள் 1995 ஆம் ஆண்டு 40 பேர் கொண்ட குழுவை நியமித்தார். அந்தக்குழுவில் சிலை அமைப்பு கண்காணிப்புக்குழுத் தலைவராக சிவகுமார் அவர்கள் நியமிக்கப்பட்டார். திரு. சிவகுமார் அவர்கள் குதிரையின் படத்தைத் தேர்ந்தெடுத்து அரிய ஆலோசனை வழங்கினார்.

திரு.சிவகுமார் அவர்களுடைய மனைவி திருமதி லட்சுமி. அமைதியும் அடக்கமும் நிறைந்தவர். திரு.சிவகுமார் அவர்களின் வெற்றிக்கு முக்கிய பின்புலமாக விளங்குபவர் இவரே என்றால் மிகையாகாது. இவரது மகன் திரு. சூர்யா – மருமகள் திருமதி ஜோதிகா. இரண்டாவது மகன் திரு. கார்த்தி – மருமகள் திருமதி ரஞ்சனி; மகள் திருமதி பிருந்தா – மருமகன் திரு. சிவகுமார். மகன்கள் இருவரும் தங்களது திரையுலகச் சாதனைகளால் கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்து வருகிறார்கள்.

சிறந்த நடிகர், சிறந்த எழுத்தாளர், பேச்சாளர், சிறந்த ஓவியர், மனிதநேய மாண்பாளர், கம்பன் காதலன், தவப்புதல்வர்கள் புகழ் பாடும் நாட்டுப் பற்றாளர் போன்ற பன்முகங்கள் கொண்டு கொங்குச் சமுதாயம் பெருமைப்படும் அளவில் பல சாதனைகளைப் படைத்து சமுதாய முன்னேற்றத்திற்கு உன்னதமாய்ப் பணியாற்றியமைக்காக, திரையுலக மார்கண்டேயர் திரு. சிவகுமார் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 02–09–2012 அன்று சென்னை காமராஜர் அரங்கத்தில் நடைபெற்ற பொன்விழாவில் 'கொங்கு மாமணி'' விருது வழங்கி கௌரவித்தது.

❖❖❖❖❖

## மணமகன் தேவை

| | | |
|---|---|---|
| ஜாதகி பெயர் | : | பி.கார்த்திகேயணி |
| கல்வித்தகுதி | : | M.Sc., (S.W.Engg.) at PSG TECH, CBE & Doing MS. (Computer Science) at New york, USA |
| பிறந்த தேதிநாள் | : | 20-05-1987 புதன் (பிரப. வைகாசி 6) |
| பிறந்த நேரம் | : | 07:15.00 p.m. (GMT 11:15:00 a.m.) |
| இடம் | : | பிலிப்பைன்ஸ் நாடு Losbanos |
| குலம் | : | பெரியகுலம் |
| நட்சத்திரம் | : | சதயம், பாதம் 1 |
| ராசி | : | கும்பம் |
| லக்னம் | : | விருச்சிகம் |
| உயரம் / நிறம் | : | 5.5 அடி (166 cm ) சிகப்பு |
| தாய், தந்தையார் | : | பி.சரோஜா & Dr. K. பழனிச்சாமி |
| உடன்பிறப்பு | : | ஒரு தங்கை, B.E., |
| சொத்து வசதி | : | பங்களா, சைட்டுகள், சைட்பூமிகள், வாடகை வருமானம் மற்றும் சேமிப்புகள் என நல்ல வசதி |
| சொத்து மதிப்பு | : | ரூ. 15–20 கோடி: ஆண்டு வருமானம் ரூ. 40 லட்சம். |
| சொந்த ஊர் | : | கோவை |
| எதிர்பார்க்கும் மணமகன் | : | B.E., M.S., அமெரிக்காவில் படித்து, நல்ல வேலையில் அமெரிக்காவில் இருப்பவர். |
| தொடர்புக்கு | : | 0422-2448878 & 94425 48782 |

| | | | |
|---|---|---|---|
| குரு ராகு | சுக் மாந் | சூரி புத | செவ் |
| சந் | இராசி | | |
| | | | |
| | சனி லக் | | கேது |

| | | | |
|---|---|---|---|
| | | கேது | சுக் |
| சூரி குரு, சனி | நவாம்சம் | | புத மாந் |
| | | | |
| சந் லக் | செவ் ராகு | | |

❖❖❖❖❖

# மணமகன் தேவை

| | | |
|---|---|---|
| ஜாதகி பெயர் | : | எஸ்.மதுமிதா |
| கல்வித்தகுதி | : | B.E., ECE., at PSG Tech, Coimbatore<br>MS (Communication Engg)<br>at National University - Singapore |
| பிறந்த தேதிநாள் | : | 16-10-1989 திங்கட்கிழமை (சுக்கில புரட்டாசி 29) |
| பிறந்த நேரம் | : | 12:40.00 a.m. (GMT 07:10:00p.m.) |
| இடம் | : | கோயமுத்தூர் |
| குலம் | : | அந்துவன் |
| நட்சத்திரம் | : | அஸ்வினி, பாதம் 4 |
| ராசி | : | மேஷம் |
| லக்னம் | : | கடகம் |
| உயரம் / நிறம் | : | 5.3 அடி, (160 cm ) மாநிறம் |
| தொழில் | : | Research Engineer@NUS, Singapore |
| தாய், தந்தையார் | : | எஸ்.உமாசெல்வி & K. செல்லமுத்து |
| உடன்பிறப்பு | : | இவர் ஒரே பெண் |
| சொத்து வசதி | : | வீடுகள், சைட்டுகள், விவசாய சைட் பூமிகள் 22 ஏக்கர், வாடகை வரவு, சேமிப்பு என நல்ல வசதி சுமார் (ரூ. 20 கோடி), |
| சொந்த ஊர் | : | பொள்ளாச்சி, கோவை |
| எதிர்பார்க்கும் மணமகன் | : | கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்கள் சார்ந்தவராய் நன்கு படித்து சொந்த தொழில் / கல்வி நிலையம் நடத்துபவர் : இன்ஜினியர் படிப்புடன் தென்இந்தியாவில் அல்லது சிங்கப்பூரில் நல்லவேலையில் இருப்பவர் |
| தொடர்புக்கு | : | 9842288444, 9942988444, 04259259301 |

| | | | |
|---|---|---|---|
| | சுந் | | குரு மாந் |
| | இராசி | | கேது லக் |
| ராகு | | | |
| சனி | சுக் | | சூரி, செவ், புத |

| | | | |
|---|---|---|---|
| குரு கேது | புத | | |
| | நவாம்சம் | | சுந் |
| | | | செவ் சனி |
| | சுக் | மாந் | சூரி, ராகு லக் |

❖❖❖❖❖

# மணமகள் தேவை

| | |
|---|---|
| ஜாதகர் பெயர் | : ஆர்.வருண் |
| பிறந்த தேதி | : 19–12–1983 திங்கட்கிழமை |
| பிறந்த நேரம், இடம் | : 7.44.00 p.m. (GMT 02:14:00 pm.) நாமக்கல் |
| நட்சத்திரம் | : மிருகசீஷம் (பாதம் 2), ராசி : ரிஷபம், லக்கனம் : மிதுனம் |
| தந்தை பெயர் | : பி.என்.இராஜா |
| தாயார் பெயர் | : ஆர்.சரோஜா |
| உடன் பிறப்பு | : அண்ணன் ஒருவர் (திருமணமானவர்) |
| குலம் | : கூறை குலம் (கருமலை ஆண்டவர் கோயில்) |
| கல்வி | : B.E., (CSE) |
| தொழில் | : கம்ப்யூட்டர் இன்ஜினியர், சொனாட்டா சாப்ட்வேர், பெங்களூர் |
| மாத வருமானம் | : ரூ. 60,000/– |
| சொத்து | : சொந்த வீடு, 7 ஏக்கர் நிலம், 3 வீட்டு மனை, கோயமுத்தூர் |
| எதிர்பார்ப்பு | : B.E., M.E., MCA., MBA., or Any degree holder |
| தொடர்புக்கு | : 080–22552150, 09341236362, 094482 42280 |

| | | | |
|---|---|---|---|
| | | சந் ராகு | லக் |
| | இராசி | | மாந் |
| | | | |
| சூரி புத | குரு கேது | சுக் சனி | செவ் |

| | | | |
|---|---|---|---|
| குரு சனி | சுக் | சூரி | லக் |
| | நவாம்சம் | | ராகு |
| கேது | | | செவ் |
| | | புத | சந் மாந் |

❖❖❖❖❖

# மணமகள் தேவை

| | |
|---|---|
| ஜாதகர் பெயர் | : பி.கோகுலகிருஷ்ணன் |
| பிறந்த தேதி | : 22–09–1981 செவ்வாய் |
| பிறந்த நேரம், இடம் | : 14.19 IST, ஈரோடு |
| நட்சத்திரம் | : புணர் பூசம் (பாதம் 2), ராசி : மிதுனம், லக்கனம் : மகரம் |
| தந்தை பெயர் | : கே.என்.பாலசுப்பிரமணியன் |
| தாயார் பெயர் | : திலகவதி |
| தந்தை தொழில் | : Textile Export Business |
| உடன் பிறப்பு | : 1 அக்கா டாக்டர், ஆஸ்திரேலியா, திருமணமானவர்; மாப்பிள்ளை – டாக்டர் |
| கல்வி | : M.Sc., International Business, London, (UK), MA., (Marketing) (UK) |
| தொழில் | : Own Textile Export Business, Karur |
| உயரம் / நிறம் | : 5.6 அடி, நல்லசிவப்பு |
| குலம் / கோவில் | : புலியூர் பெருங்குடி குலம், புலியூர் ஸ்ரீ முச்சிலியம்மன், ஸ்ரீ காளியம்மன் |
| எதிர்பார்ப்பு | : நல்ல பாரம்பரியமான குடும்பப் பின்னணி, நன்கு படித்த குணவதியான குடும்பப் பாங்கான பெண். |

| | | | |
|---|---|---|---|
| | | | சுந் |
| | இராசி | | செ ரா |
| லக் கே | | | |
| | | புத சுக் | சூரி குரு, சனி |

| | | | |
|---|---|---|---|
| சுக் | | சுந் | சனி |
| சூரி கே | நவாம்சம் | | குரு |
| லக் | | | ரா |
| செ | | புத | |

தொடர்புக்கு :
தந்தை : கே.என்.பாலசுப்பிரமணியன் செல் : 98430 79736
தாய் : திலகவதி செல் : 9047034549

❖❖❖❖❖